**FIRST INFORMATION REPORT** — **TAMIL NADU POLICE**

**முதல் தகவல் அறிக்கை** — INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102051

1. District : மாவட்டம் சிவகங்கை — PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு — Year: ஆண்டு 2018 — FIR No.: மு.த.அ. எண் 03/18 — Date: நாள் 03.05.18

2. (i) Act சட்டம்: இ.த.ச. — Sections பிரிவுகள்: 420, 465, 467, 468

   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம்-1988 — Sections பிரிவுகள்: 13(1)(d) உ/இ 13(2)

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 10.05.17 — Date to : நாள் வரை 03.06.17

   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.06.17 — Time : நேரம்

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 15 கி.மீ வடகிழக்கில் பட்டமங்கலம்.

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் வெ.ராஜகோபால் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் வெள்ளைச்சாமி

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 65/2018 — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் பந்தல் காண்டிராக்டர் — (g) Address : முகவரி 35/1, வடக்குத் தெரு, பட்டமங்கலம், சிவகங்கை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   சி. ஆனந்த சுப்பிரமணியன், வயது 43/18, த/பெ. சின்னையா, தீயணைப்போர் எண். 6505, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், சிவகங்கை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   புகார் சம்பந்தமாக முதனிலை விசாரணை நடத்தப்பட்டு அதன்பின் இவ்வழக்குப் பதிவு செய்யப்பட்டதால் தாமதம்.

GCP 240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. **Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)**
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)**

—

10. **Total value of properties stolen / involved :**
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு** —

11. **Inquest Report / Un-natural death Case No. if any:**
**பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்** —

12. **FIR Contents (Attach separate sheet, if required) :**
**முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)**

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்கள் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 03.05.2018–ம் தேதி 11.00 மணிக்கு நான் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது, சிவகங்கை மாவட்டம் பட்டமங்கலம் கதவு எண்.25/1, வடக்கு தெருவை சேர்ந்த திரு.V.ராஜகோபால் என்பவரது புகார்மனுவின் அடிப்படையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக குறிப்பாணை எண். மு.வி 248/2017/FS/SG, நாள் 30.06.2017 உத்திரவின்படி சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.M.P.காதர் அவர்களால் முதனிலை விசாரணை பதிவு செய்யப்பட்டு மேற்படி காவல் துணை கண்காணிப்பாளர் பணிஓய்வில் சென்றுவிட்டதால் என்னால் முதனிலை விசாரணை மேற்கொள்ளப்பட்டு அந்த விசாரணையிலிருந்து கீழ்க்கண்ட விபரங்கள் தெரிய வருகிறது.

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. **Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed** M. Chandran **Rank** Inspector ~~to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................on point of jurisdiction.~~ VACC, Sivagangai

**எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.**

**FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.**
**மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.**

[signature] [signature] 03/05/18

14. **Signature / Thumb Impression of the Complainant / Informant**
**குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு**

**Signature of the Officer in-charge, Police Station**
**காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்**

15. **Date & Time of despatch to the court:**
**நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்** 03.05.18 | 12.00 hrs

**Name: பெயர்** ரா. ரகுபதி.....
**Rank: நிலை** காவல் துணைக்கண்காணிப்பாளர்

சிவகங்கை ஊ.த.க.பிரிவு குற்ற எண்.03/2018 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

மேற்படி புகார்மனுவின் விபரம் கீழ்க்கண்டவாறு உள்ளது. அனுப்புநர் வெ.ராஜகோபால், பட்டமங்கலம், 25/1 வடக்குதெரு, பெறுநர், துணை கண்காணிப்பாளர் அவர்கள் லஞ்ச ஒழிப்பு துறை சிவகங்கை மாவட்டம், சிவகங்கை, ஐயா, ஆனந்த சுப்பிரமணியன் என்பவர் திருப்பத்தூர் தீயணைப்பு நிலையத்தில் இருந்து பணிமாற்றுதலில் சிவகங்கை நிலையத்திற்கு ஏப்ரல் மாதத்தில் பணிமாற்றம் செய்து சென்றுவிட்டார். இவர் 10.5.17 தேதிக்கு மேல் நான் புதிதாக சிறிய அளவில் கட்டியுள்ள திருமண மண்டபத்திற்கு தடையின்மை சான்று வாங்க வேண்டும் என்று கூறி 10 தினங்களாக என்னை தொந்தரவு கொடுத்து வந்தார். நான் யாரிடம் தடையின்மை சான்று வாங்க வேண்டும் என்று கேட்டதற்கு நான் தான் நிலைய அலுவலர் என்று என்னிடம் கூறி நான் தான் சான்று தரவேண்டும் என்று என்னிடம் கூறி என்னை கட்டாயப்படுத்தி தடையின்மை சான்றுக்கு ரூ.8000/- (ரூபாய் எட்டு ஆயிரம்) வாங்கிச் சென்றார். மேலும் தீயணைப்பு பாதுகாப்பு கருவிகள் வைக்க வேண்டும் என்று கூறி ரூ.8,500/- (ரூபாய் எட்டு ஆயிரத்து ஐநூறு) வாங்கி சென்றுவிட்டார். நான் இந்த ரூபாயை கையில் இல்லாமல் 10 சதவீத வட்டிக்கு வாங்கி கொடுத்து தற்பொழுது மன உளைச்சலாக உள்ளேன். எனவே அவர் கொடுத்த தடையின்மை சான்று சரியல்ல என்பது தெரிய வருவதால் ஐயா அவர்கள் இதனை விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் மிகத்தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு உண்மையுள்ள (Sd) வெ.ராஜகோபால் 05.06.2017.

மேற்கண்ட சங்கதிகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையில் கீழ்க்கண்ட பொருண்மைகள் இருப்பது தெரிய வருகிறது.

திரு.ஆனந்த சுப்பிரமணியன், தீயணைப்போர் எண்.6505, முன்னர் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம். தற்போது தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், சிவகங்கையில் பணிபுரிவதால் ஊ.த.ச.பிரிவு 2(c)ன் கீழ் பொது ஊழியர் ஆவார்.

மேற்படி புகார்மனுவில் கண்டுள்ள குற்றச்சாட்டைப் பொறுத்து திரு.ஆனந்த சுப்பிரமணியன், முன்னாள் தீயணைப்போர் எண்.6505, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் தற்போது சிவகங்கையில் பணிபுரிபவர் கடந்த 10.05.2017ம் தேதி பட்டமங்கலத்திலுள்ள வெ.லட்சுமி திருமணமகாலுக்கு தீயணைப்பு துறையின் தடையின்மை சான்று வழங்க மேற்படி

மகாலின் உரிமையாளரான புகார்தாரர் திரு.ராஜகோபாலை சந்தித்து தான் திருப்பத்தூர் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்தின் நிலைய அலுவலர் என்றும் தான்தான் தடையின்மை சான்றிதழ் தரவேண்டும் என்றும் தடையின்மை சான்று வழங்க ரூ.8000/– தீயணைப்பு கருவிகள் பொருத்த ரூ.8500/–ம் கேட்டு பின்னர் 15.05.2017ம் தேதி புகார்தாரரிடமிருந்து ரூ.8000த்தை லஞ்சமாக கேட்டு பெற்றுக் கொண்டு திருப்பத்தூர் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்தின் நிலைய அலுவலர் முத்திரை மற்றும் அலுவலக முத்திரையை பயன்படுத்தி புகார்தாரரை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் போலியான தடையின்மை சான்றை தயாரித்து போலியானது என்று தெரிந்தே 03.06.2017ம் தேதி அன்று புகார்தாரரிடம் கொடுத்து ஏமாற்றியுள்ளதற்கான முகாந்திரம் இருப்பது முதனிலை விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேற்ச்சொன்ன செயல்கள் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 420, 465, 467, 468 மற்றும் ஊ.த.சட்டப் பிரிவுகள் 13(1)(d) உ/இ 13(2)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களாகும்.

எனவே இன்று 03.05.2018ம் தேதி 11.00 மணிக்கு நான் சிவகங்கை ஊ.த.க. பிரிவு குற்ற எண்.3/2018–ன்படி மேற்கண்ட பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

இவ்வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.ராஜகோபால் புகார்மனுவின் அசல் மற்றும் இயக்குநரக குறிப்பாணை ஆகியவற்றை சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

Q. Anusuyanthi.
DSP/VAC/SVG
03.05.2018